# IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

## O.S.No.215/2018

சாட்சி : PW– 1
பெயர் : திரு. ராஜராஜசோழன் தேதி : 12.03.2026

(சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்யப்பட்டார். )

**குறுக்குவிசாரணை**:– ( 1ம் பிரதிவாதி தரப்பில்)

நான் பாகப்பிரிவினை கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். 1ம் பிரதிவாதி எனது தகப்பனார் ஆவார். 2ம் பிரதிவாதி எனது தாயார் ஆவார். 4ம் பிரதிவாதி எனது சகோதரர் ஆவார். வழக்கு சொத்து ஆதியில் ஒரு வீரபத்திரர் என்பருக்கு பாத்தியப்பட்டிருந்தது என்றால் சரிதான். மேற்படி வீரபத்திரர் எனது தந்தை வழிப்பாட்டனார் ஆவார். வழக்கு சொத்து மற்றும் இதர சொத்துகளை எனது தகப்பனாரும், அவரது சகோதரர்களும் பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினை பதிவு செய்யப்பட்டது ஆகும். மேற்படி பாகப்பிரிவினையில் எனது தகப்பனாருக்கு சொத்துகள் C ஷெட்யூலாக ஒதுககப்பட்டுள்ளது. அந்த C ஷெட்யூல் சொத்துகளைதான் இவ்வழக்கில் வழக்கு சொத்துகளாக காண்பித்துள்ளேன். வழக்கு சொத்தில்தான் நானும், 1, 4ம் பிரதிவாதிகளும் வசித்து வருகிறோம் என்றால் சரிதான். எனது தாயாரான 2ம் பிரதிவாதியும் வழக்கு சொத்தில்தான் அவர் இறக்கின்ற வரையிலும் வசித்து வந்தார் என்றால் சரிதான். இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பிருந்து எனக்கும், எனது தகப்பனாரும் பேச்சு வார்த்தையில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்தில் உள்ள வீட்டில் நானும், எனது தகப்பனாரும் தனித்தனியாக வசித்து வருகிறோம் என்றால் சரிதான். எனது தகப்பனாரும், 3ம் பிரதிவாதியும் 10 ஆண்டுகளாக நெருங்கிய

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2026.03.12 17:07:50 +0530

I Additional District Judge,
Salem

நண்பர்கள் என்றால் சரிதான். அவர்கள் இருவரும் பனியன் கம்பெனி தொழில் ஒன்றாக செய்து வந்தார்கள். எனக்கும், எனது தகப்பனாருக்கும் மனவருத்தம் இருந்த காரணத்தினால் ஊர் பெரியவர்களின் அறிவுரையின்படி வழக்கு சொத்து உள்ள வீட்டில் நான் தனியாகவும், 1ம் பிரதிவாதி தனியாகவும் வசித்து வருகிறோம் என்றால் சரிதான். என் தகப்பனாருக்கு தவறான பழக்க வழக்கங்கள் இருந்ததாக நான் சொல்லும் சங்கதிகள் பொய்யானவை என்றால் சரியல்ல. என் தகப்பனாரும், மற்ற பிரதிவாதிகளும் கூட்டாக சேர்ந்து செயல்படுவதாக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. என் தகப்பனார் மூளை நரம்பு பாதிக்கப்பட்டு 10 ஆண்டுகளாக பக்கவாத நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார் என்றால் சரிதான். என் தகப்பனார் தனித்து வெளியே வரஇயலாது என்றால் சரிதான். நான் எனது வழக்கில் 1ம் பிரதிவாதி ஒரு பொது அதிகார பத்திரத்தை ஏற்படுத்தி கொடுத்ததாகவும், மற்றும் அதனை அனுசரித்து ஒரு கிரய ஒப்பந்த பத்திரம் ஏற்படுத்தியதாகவும் சொல்லும் சங்கதிகள் தவறானது என்றால் சரியல்ல. மேற்படி ஆவணங்களில் 1ம் பிரதிவாதி கையொப்பம் செய்யவில்லை என்றும், கையொப்பம் செய்யவேண்டிய சூழ்நிலையிலும் அவரில்லை என்றால் சரியல்ல. மேற்படி ஆவணங்கள் போலியான ஆவணங்கள் என்றால் சரிதான். 3ம் பிரதிவாதியின் நண்பர் பெயருக்கு ஏற்பட்டதாக சொல்லும் ஆவணங்கள் போலியானது என்றால் சரிதான். வழக்கு சொத்துகள் இன்றுவரையிலும் 1ம் பிரதிவாதி சுவாதீனத்தில்தான் உள்ளது என்றால் சரிதான். அரசுக்கு செலுத்தவேண்டிய வரிகள் 1ம் பிரதிவாதி பெயரில்தான் செலுத்தப்பட்டு வருகிறது என்றால் சரிதான். வழக்கு சொத்து 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றும், 3ம் பிரதிவாதிக்கோ அவரது நண்பர் மற்றும் வாரிசுக்கோ எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரிதான். வழக்கு சொத்துகளில் எனக்கு எவ்வித

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2026.03.12 17:07:57 +0530

I Additional District Judge,
Salem

உரிமையும் இல்லை என்றும், எனவே வழக்கு சொத்துகளில் நான் பாகம் கோர இயலாது என்றும், எனவே எனது வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** – இல்லை.

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2026.03.12 17:08:04 +0530

I Additional District Judge,
Salem